**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண். 711/2023</u>**

2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 14–ம் நாள் திங்கள்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | கோவிந்தசாமி | தொழில் |
| த/பெ | வீரப்பகவுண்டர் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** வழக்கறிஞர் அறிவிப்பு, வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் என்னுடைய வழக்கறிஞரிடம் சொல்லி அவை தயார் செய்யப்பட்டன. அதில் உள்ள விபரங்கள் சரியாக உள்ளதா என்று சரிபார்த்து தான் நான் அதில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வழக்கு தொடர்பான வேறு ஆவணங்கள் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்துவதில்லை. தாவா சொத்திற்கான அரசு மதிப்பு எனக்கு தெரியாது.

**2.** தாவாவில் பிரதிவாதி இரண்டு மாத கால அவகாசத்தில் கிரையம் எழுதிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் **70** நாட்களுக்குள் கிரைய ஆவணம் எழுதிக் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். கிரைய உடன்படிக்கையில் என்ன விபரங்கள் உள்ளது என்பதை எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல தெரியும். தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா

என்றால் தெரியும் கிழ மேல் ரோட்டுக்கு தெற்கு, தென் வடல் ரோட்டுக்கு கிழக்கு, கிழுபுறத்து சைட்டுக்கு மேற்கு தென்புற சைட்டுக்கு வடக்கு ஆகும். அருகில் இருக்கும் வீட்டுமனையின் எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பொரம்பு மண் கொண்டதாகும். தாவா சொத்துக்கு பக்கத்தில் வீடு உள்ளது அதை யாருடைய வீடு என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் என்ன மரம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல அங்கு மரம் எதுவும் இல்லை.

3. பிரதிவாதியை எனக்கு 2020 லிருந்து 4–5 வருடங்களாக தெரியும். பிரதிவாதியின் வயது 34 தான் என்றாலும் நான் தவறாக 45 என குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் நான் சுமாராகத்தான் குறிப்பிட்டேன். பிரதிவாதியின் தாய்மாமன் குமார் எனக்கு நண்பர் என்ற வகையில் எனக்கு பிரதிவாதியை தெரியும். எனக்கு பிரதிவாதியிடம் நேரடியாக பழக்கம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. குப்புசாமி என்பவர் பிரதிவாதியின் மீது தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 260/2021 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் இவ்வழக்கு சொத்தை பற்றுகை செய்வதற்காக மனுதாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது.

4. வழக்கு சொத்தின் மூல பத்திரம் அதனுடைய அசல் பத்திரம் ஆகியவை பிரதிவாதியிடம் உள்ளது. வழக்கு சொத்தின் மூல பத்திரத்தை நான் இதுவரையில் பார்த்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு புகைப்படம் நகல் எடுத்துக் கொடுத்தார். நான் பிரதிவாதியிடம் ரூபாய் 6 லட்சத்து 67 ஆயிரத்து 750 யை ஒரே தவணையில் கொடுத்தேன். பதிவு செய்யும் நோக்கத்துடன் வா.சா.ஆ.1 தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 யை பத்திர எழுத்தரோ, வழக்கறிஞரோ தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல பத்திர எழுத்தர் தான் தயார்

செய்தார். மேற்படி 6 லட்சத்து 67 ஆயிரத்து 750 ரூபாய் என்னுடைய மருமகனிடமிருந்து நான் வாங்கினேன். என்னுடைய மகளுக்காக அந்த தொகையை அவர் கொடுத்தார்.

5. வா.சா.ஆ.1 என்னுடைய பெயரில் தான் எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 யை காளிமுத்து என்பவர் தயார் செய்தார். தாவா சொத்தை யார் பிரதிவாதிக்கு விற்றார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.தாவா சொத்தின் வில்லங்கச் சான்றிதழை நான் இன்று வரையில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல பார்த்தேன். வில்லங்க சான்றிதழை பார்த்திருந்தால் மேற்படி சொத்தை பிரதிவாதிக்கு யார் விற்றார் என்பது குறித்து எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் நான் அதை பார்வையிடாதால் தான் அது குறித்து எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் கால அவகாசம் கோரப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.07.14 20:30:46 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.